MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

மேன்மதி கோவை தமிழ் மன்றம்

சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

MENMATHI KOVAI TAMIL MANDRAM

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS

# தமிழர் மரபில் சொற்குற்றங்கள்

**முதுமுனைவர் த. மகாலெட்சுமி**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை

எஸ்.டி.என்.பி. மகளிர் வைணவக் கல்லூரி

குரோம்பேட்டை, சென்னை

# Word offenses in Tamil tradition

**Post Doctor T.Mahalakshmi**

Assistant professor, Department of Tamil.

SDNB Vaishnav College for Women

Chromepet, Chennai

**Abstract**

Our Tamil language, which originated in ancient times and flourished during the classical period, is a language of enduring significance. The grammatical texts composed based on ancient Tamil life and culture not only formulated rules for letters, words, and meaning but also pointed

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

out the errors that occur in them. That is why ancient Tamil poems, in terms of verse, style, and content, remain rich and relevant even today. Speakers and writers of such a rich language should never commit verbal errors. This article focuses on four such verbal errors: backbiting, speaking useless words, speaking harsh words, and lying.

## ஆய்வுச்சுருக்கம்

தொல் பழங்காலத்திலேயே தோன்றிச் செவ்விலக்கியக் காலத்திலேயே மிகவும் பண்பட்டு நீடு நிலைத்திருப்பது தமிழ்மொழி. பழந்தமிழ் வாழ்வியலை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்ட இலக்கண நூல்களில் எழுத்து, சொல், பொருள் ஆகியவற்றிற்கு இலக்கணம் வகுத்ததோடு, அவற்றுள் ஏற்படும் குற்றங்களையும் சுட்டிக்காட்டியுள்ளனர். அதனால்தான் பழந்தமிழ்ச் செய்யுட்கள் பா, நடை, கருத்து போன்றவற்றில் செறிவுடன் இன்றும் பயனளித்து வருகின்றது. இத்தகைய வளமான மொழியைப் பேசுபவர்கள், எழுதுபவர்கள் எப்போதும் சொற்குற்றங்களைச் செய்தலாகாது. இங்கு அத்தகைய சொற்குற்றங்களுள் புறஞ்சொல்லல், பயனில சொல்லல், இன்னாப் பேசல், பொய்மை பேசல் ஆகிய நான்கினைப் பற்றி மட்டும் பேசுவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

## திறவுச்சொற்கள்

சொற்குற்றம், புறஞ்சொல்லல், பயனில சொல்லல், இன்னாப் பேசல், பொய்மை பேசல், பிந்தைய சில குறிப்புகள்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

**முன்னுரை**

பொதுவாகச் சொல்லின் குற்றம் என்பது ஒரு சொல்லில் உள்ள குறைபாட்டைக் குறிக்கும். அது இலக்கண விதிமுறைகளுக்குப் புறம்பாகவோ அல்லது பொருள் குழப்பத்தை ஏற்படுத்துவதாகவோ இருக்கலாம். நன்னூலில், பத்து வகையான சொற் குற்றங்களைப் பகுத்துச் சொல்லக் காண்கின்றோம். அவை; குறை, மிகை, அடுக்கு, முரண், வழு, தீமை, அஃதுடையது, தொகை, மரூஉ, திரிபு ஆகும். ஒவ்வொரு குற்றமும் சொல்லின் பயன்பாட்டில் ஏற்படும் ஒரு குறிப்பிட்ட வகையின் தவறைக் குறிக்கின்றது. செய்யுள் படைக்கும் புலவன் எழுத்துக் குற்றமும், சொற்குற்றமும், பொருட் குற்றமும், யாப்புக் குற்றமும், அலங்காரக் குற்றமும் ஆகிய ஐவகை யானந்தமும் வாராமல் படைக்க வேண்டும் என்பர்.

**யாப்பினு ளெழுத்துச் சொற்பொருள் யாப்பணிக்**
**குற்றமு மைவகை குறிக்குமா னந்தமும்**
**வாரா துரைப்பது வழுவில வாகும்.** (முத்துவீரியம் -1003)

மேற்கண்ட பத்து வகைக் குற்றங்களும் மிக ஆழமாக ஆராய வேண்டிய செய்தி வளம் கொண்டன. திருவள்ளுவர், ‘இந்தச் சொல்லை இன்னொரு சொல் வெல்லாது என்று உணர்ந்த பிறகே அந்தச் சொல்லைப் பயன்படுத்த வேண்டும்’ என்கிறார்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

**சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை**
**வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து**. (குறள்.645)

இந்தக் குறள், “நீங்கள் சொல்ல வேண்டுமானால் பயன் தருவனவற்றை மட்டும் பேசுக” என்கிறது. குறளின் முற்பகுதி, சொல்ல வேண்டுமானால் என்றதால் “தேவை ஏற்பட்டால் மட்டுமே பேசுக” என்றும் “தேவை இல்லாவிட்டால் ஒன்றுமே பேசாமல் இருப்பதே சாலச் சிறந்தது” என்றும் “இன்றியமையாமை கருதிச் சொல்ல நேர்ந்தால் மட்டுமே பயனுடையவற்றைச் சொல்லுக” என்றும் கூறுகின்றது. பிற்பகுதி “பேசும் சொற்களில் பயன்தராத சொற்களைச் சொல்லவேண்டாம்” என்றும் சொல்கிறது. இங்குக் கட்டுரையின் எல்லைக் கருதிச் சொற்குற்றத்தில் அடங்கும் நால்வகைத் தீமைகளைப் பற்றி மட்டும் இலக்கியச் சான்றுகளோடு காண்போம்.

## சொற்குற்றம்

சொற்குற்றங்கள் என்பது சொல்லின் பிழைகள் அல்லது இலக்கணத்திற்கு மாறான சொல் பயன்பாடுகளைக் குறிக்கும். நாம் நம் ஐம்புலன்களில் எதை அடக்குகிறோமோ இல்லையோ நாவைக் கட்டாயமாக அடக்க வேண்டும். அவ்வாறு அடக்காவிட்டால் பல இன்னல்களுக்கு ஆளாக நேரிடும்.

**சொலற்பால அல்லாத சொல்லுதலும் குற்றம்** (நான்மணி.100:3)

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

**பொல்லாத சொல்லி மறைந்தொழுகும் பேதைதன்**
**சொல்லாலே தன்னைத் துயர்படுக்கும் - நல்லாய்**
**மணலுள் முழுகி மறைந்து கிடக்கும்**
**நுணலும் தன் வாயால் கெடும்.** (பழமொழி-114)

சொற்களைப் பயன்படுத்துவதில் ஏற்படும் தவறுகள் **புறஞ்சொல்லல், பயனில சொல்லல், இன்னாப் பேசல், பொய்மை பேசல்** ஆகிய நான்கும் சொற்குற்றங்கள்ஆகும். இச்சொற்குற்றங்களால் வரும் தீமைகளையும் அவற்றை விலக்குவதால் வரும் நன்மைகளையும் வள்ளுவர் புறங்கூறாமை. பயனில் சொல்லாமை. இனியவை கூறம், வாய்மை என்னும் அதிகாரங்களில் விளக்குகின்றார்.

**தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே**
**நாவினாற் சுட்ட வடு.** (குறள்.129)

தீயினால் சுட்ட புண் புறத்தே வடு இருந்தாலும் உள்ளே ஆறிவிடும். ஆனால் நாவினால் தீயச் சொல்லைக் கூறிச் சுடும் வடு என்றும் ஆறாது. சொல்லினால் ஆக்கமும், அழிவும் ஏற்படும். கோபத்தை அடக்கிக் காக்க முடியாவிட்டாலும் நாக்கை அடக்க வேண்டும். நாவை அடக்காமல் சொல்லத் தகாத சொற்களால் எடுத்தெறிந்து பேசுவதால் அச்சொற்கள் கேட்போர் மனதைப் புண்ணாக்கி, கடும் கோபத்தை உண்டாக்கும். இப்படி நாவை அடக்காது ஒருவர் மாறி ஒருவர் தாக்கப்படுவதால் வேண்டத்தகாத விளைவுகள் ஏற்படும்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

1. **புறஞ்சொல்லல்**

அனைத்து நீதிநூல்களும் சமயங்களும் புறங்கூறுதலை வெறுத்தே பேசுகின்றன. இதனைப் பெருங்குற்றமாகவும் பாவமாகவும் கருதுகின்றன. இலக்கியத்தில் புறங்கூறாமை என்பது ஒருவரைப் பற்றி அவர் இல்லாத போது அவதூறாகப் பேசுவதைத் தவிர்ப்பது அல்லது ஒருவரின் முதுகின் பின்னால் தவறாகப் பேசுவதைத் தவிர்ப்பது என்று பொருள்படும். இது ஒரு நல்லொழுக்கமாகவும், சமூகத்தில் நல்லிணக்கத்தைப் பேணுவதற்கான ஒரு பண்பாகவும் பார்க்கப்படுகிறது. வள்ளுவர் திருக்குறளில் புறங்கூறாமை என்னும் அதிகாரத்தையே படைத்திருக்கிறார். ஒருவன் அறத்தைப் போற்றிக் கூறாதவனாய் அறமல்லாதவற்றைச் செய்தாலும், மற்றவனைப் பற்றிப் புறங்கூறாமல் இருக்கிறான் என்று சொல்லப்படுதல் சிறந்தது என்பர்.

**அறங்கூறா னல்ல செயினும் ஒருவன்**
**புறங்கூறா னென்றல் இனிது** (குறள்.181)

ஒருவனுக்கு நேரே எதிர்நின்று, கருணையின்றிப் பேசினாலும் பேசலாம். ஆனால், அவன் இல்லாதபொழுது, பின்னர் விளையுந் தீமையை எண்ணிப் பார்க்காமல் புறங்கூறக் கூடாது.

**கண்ணின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க**
**முன்னின்று பின்நோக்காச் சொல்.** (குறள்.184)

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

இந்தக் குறளில், "கற்க கசடறக் கற்பவை, கற்றபின் நிற்க அதற்குத் தக." என்னும் குறள் நடையைப் போன்று, "சொல்லற்க" என்பது வள்ளுவரின் கட்டளையாக விளங்குகிறது. காலமெல்லாம் புறம்பேசி வாழ்பவரைக் கடுமையாகச் சாடிய வள்ளுவர், புறங்கூறிப் பொய் பேசி உயிர் வாழ்வதை விட, இறந்து போவதே மேலானது, ஏனெனில் அது அறநெறிக்கு நன்மை தரும் என்று கூறுகின்றார்.

**புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்**
**அறங்கூற்றும் ஆக்கத் தரும்.** (குறள்.183)

பிறரின் முன்னேற்றத்தைப் பார்த்துப் பொறாமை கொள்வது, புறங்கூறுதலுக்கு ஒரு காரணமாக இருக்கலாம். ஒருவருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு அல்லது சினத்தின் காரணமாக, அவர் இல்லாத போது புறங்கூறலாம். சிலர் பேசுவதைப் பார்த்து நாமும் புறங்கூறுவது ஒரு பழக்கமாக மாறலாம். ஆகவே புறங்கூறுதலால் சமூக உறவுகள் பாதிக்கும், நற்பெயருக்குக் களங்கம் உண்டாகும், இரு தரப்பினருக்கும் மன உளைச்சல் ஏற்படும். புறங்கூறாது இருப்பின் நல்லுறவு, சமாதானம், மரியாதை, அமைதியான சமூகம் உருவாகி பெருநன்மைகள் கிடைக்கும்.

## 2. பயனில சொல்லல்

தற்காலச் சூழலில் பயனில சொல்லுதல் பல பரிமாணங்களில் நடைபெறுகின்றது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

பயனில் சொல்லல் என்பதற்குப் பயனில்லாத சொற்களைப் பேசுதல் அல்லது பயனற்ற பேச்சு என்று பொருள். பலர் முன்னிலையில் பேசுவதாக இருந்தால், அதைவிட மோசமானது, ஒருவரின் நண்பர்களுடன் விரும்பத்தகாத செயல்களைச் செய்வதாகும். திருக்குறளின் 20ஆம் அதிகாரமான ’பயனில சொல்லாமை’ என்னும் பொருண்மையில் கருத்துரை வழங்கப்பட்டுள்ளது. சான்றோர், அறிவினார், மாசறு காட்சியவர் போன்றோர் பயனில சொல்லமாட்டார்கள் எனக் கூறப்படுகிறது. நடைமுறை வாழ்க்கையில் எல்லாமே கருத்தாழம் மிக்க பேச்சுக்களாக இருக்க முடியாது. அதில் அறியாமையுடன் கூடிய மகிழ்ச்சிச் சொற்களும் இடம்பெறும். பல்லார்முன், பல்லாரகத்து என்னும் தொடர்கள் வருவதால், பலபேர் கூடியுள்ள இடத்தில் தேவை இல்லாத, பொருளற்ற, வெறுக்கத்தக்க வெற்றுரைகள் கூறவேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகிறது. பயன் இல்லாத ஒன்றைப் பற்றியே விரிவாகப் பேசும் ஒருவனது பேச்சானது, ‘அவன் நல்ல பண்பில்லாதவன்’ என்பதை உலகுக்கு அறிவிக்கும் செயலாக அமைகின்றது.

**நயனிலன் என்பது சொல்லும் பயனில**
**பாரித் துரைக்கும் உரை** (குறள்.193)

பலர் முன்னே பயனில்லாத சொற்களைச் சொல்லுதல் என்பது நண்பரிடத்தில் அறம் இல்லாச் செயல்களைச் செய்தலை விடத் தீமையானதாகும்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

**பயனில பல்லார்முன் சொல்லல் நயனில**
**நட்டார்கண் செய்தலிற் றீது** (குறள்.192)

பயனற்ற சொற்களைப் பேசிக் கொண்டிருப்பவனை மனிதன் என்று சொல்லாமல், மக்களில் பதர் என்று சொல்ல வேண்டும். அவன் உள்ளீடு இல்லாத பதரைப் போன்றவன் என்கிறார் வள்ளுவர் கூறுகிறார்

**பயனில்சொல் பாராட்டு வானை மகன்எனல்**
**மக்கட் பதடி யெனல்** (குறன்.196)

சான்றோரும், அறிவுடையோரும், மனதில் மாசற்றோரும், பயனில்லாத சொற்களைத் தப்பித் தவறியும், மறந்தும் பேச மாட்டார்கள் என்னும் கருத்தினை 197, 198, 199ஆம் குறள்கள் எடுத்துரைக்கின்றன. இவ்வாறு திருக்குறளின் பயனில சொல்லாமை என்னும் அதிகாரத்தில் பயனற்ற சொற்களைப் பேசுவதால் ஏற்படும் தீமைகள் எல்லாம் மிக அழகாகச் சொல்லப்பட்டுள்ளன. ஆகவே பயனில சொல்வதை மிகக் கொடிய குற்றமாகக் கருதாமல் அதைத் தவிர்த்தலே நன்மை பயக்கும். ஒருவர் பேசும் சொற்களால் பிறரை வாழ வைக்கவும் முடியும், சாகடிக்கவும் முடியும் என்பதும் விளங்கும். இன்றைய மக்களுள் பெரும்பாலானோர் பல்வேறு சமூக வலைத்தளங்களில் பயனில்லாத சொல் விளையாட்டில் ஈடுபட்டு நேரத்தை வீணடிக்கிறார்கள். அவர்கள் நல்வாழ்விற்குத் தேவையானதை மட்டும் கண்டும், கேட்டும், பகிர்ந்தும் இன்புறுதலே சிறப்புடையதாகும்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

### 3. இன்னாப் பேசல்

இன்னாப் பேசல் என்பதற்குத் துன்பம் தரும் சொற்களைப் பேசுதல் என்று பொருள். இது பழந்தமிழ்ச்சொல். இன்னா என்றால் துன்பம் என்றும் பேசல் என்றால் பேசுதல் என்றும் பொருள்படும். இன்னாச்சொல் என்பது தமிழ் இலக்கியத்தில் குறிப்பாகத் திருக்குறளில் பயன்படுத்தப்படும் ஒரு சொல். அதன் பொருள் துன்பம் தரும் சொல், கடுஞ்சொல் என்பதாகும். இன்னா நாற்பது என்னும் நூலிலும் இந்தச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. அந்த நூலில் துன்பம் தரக்கூடிய செயல்களைப் பேசுவதைத் தவிர்க்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. ஒரு செயலைச் செய்வதால் ஒருவருக்குத் துன்பம் ஏற்படும் என்று தெரிந்தும் அந்தச் செயலைப் பிறரிடம் செய்யக் கூடாது. தீயச் சொற்களாலே வந்தடைந்த பொருளாகிய நன்மை ஒன்றாயினும் ஒருவனிடம் இருந்தாலும் அதனால் எல்லா நன்மையும் இல்லாமல் போய்விடுகின்றது.

**ஒன்றானுந் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்**
**நன்றாகா தாகி விடும்.** (குறள்.128)

பொறாமை, ஆசை, சினம், இன்னாச்சொல் (கடுஞ்சொல்) என்னும் நான்கிற்கும் ஒரு சிறிதும் இடம் தராமல் ஒழுகி வருவதே அறம் ஆகும். இன்னாச் சொற்களைக் கூறுவது அறநெறிக்கு முரண்பட்டது மட்டுமல்லாமல், அது ஒருவனுக்குக் கேடு விளைவிக்கும் என்றும் தெய்வப்புலவர் எடுத்துரைக்கின்றார்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

**அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்**
**இழுக்கா இயன்றது அறம்.** (குறள்.35)

மேலும், கடுமையான பேச்சும், இரக்கமற்ற தன்மையும் உடையவனானால், அவ்வரசனது பெருஞ்செல்வமும் நீடித்திருக்காமல் தேய்ந்து அப்போதே கெடும் என்றும் வினவுகின்றார்.

**கடுஞ்சொல்லன் கண்ணிலன் ஆயின் நெடுஞ்செல்வம்**
**நீடின்றி ஆங்கே கெடும்.** (குறள்.566)

நாட்டை ஆளும் அரசன், தன்னை நாடி வருவோர்க்குக் காட்சிக்குத் தான் எளியனாயும் கடுஞ்சொல் சொல்லாதவனாயும் விளங்கினால், அவன் நாட்டை உலகமே உயர்வாகப் பேசுவார்கள் என்றும் சுட்டுகின்றார்.

**காட்சிக் கௌியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்**
**மீக்கூறும் மன்னன் நிலம்.** (குறள்.386)

வள்ளுவர், அயலார் கூறும் இன்சொல்லால் தனக்கு இன்பம் பிறத்தலை அறிகின்றவன், பிறரிடத்து வன்சொற்களைப் பேசுவது ஏனோ என்று வருந்துவதையும் காணலாம்.

**இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ**
**வன்சொல் வழங்கு வது.** (குறள்.99)

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

பேசுவதற்கு இனிய சொற்கள் இருக்கும் போது அவற்றை விட்டுக் கடுமையான சொற்களைப் பேசுதல் என்பது சுவையான கனிகள் இருக்கும் போது அவற்றை விட்டுக் கசப்பான காய்களைப் பறித்துத் தின்பதைப் போன்றதாகும்.

**இனிய உளவாக இன்னாத கூறல்**
**கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று.** (குறள்.100)

திருக்குறளின் பத்தாவது அதிகாரமான இனியவை கூறல் என்னும் பகுதியில். இனிமையான சொற்கள் பேசுதலை விளக்கக் காணலாம். இதில் ஒரு மனிதன் மற்றவர்களிடம் பேசும்போது எப்படிப் பேச வேண்டும், என்ன பேச வேண்டும் என்பதை வள்ளுவர் விளக்கியுள்ளார். இனியவை நாற்பது என்னும் நூலின் ஒவ்வொரு பாடலிலும் வாழ்க்கையில் நன்மை தரும் கருத்துக்களைத் தேர்ந்தெடுத்து 'இனிது' என்று குறிப்பிட்டு அமைக்கப்பட்டிருப்பதை ஈண்டு நோக்கத்தக்கது.

**4. பொய்மை பேசல்**

பொய்மை என்பது பொய், பொய்யான தன்மை என்று பொருள். இது உண்மைக்கு மாறான, தவறான, அல்லது நம்பகத்தன்மை இல்லாத ஒன்றைக் குறிக்கும். பொய் என்பது ஏமாற்றுதல், மறைத்தல் போன்ற நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகிறது. பொய்யால் அழிந்த குடும்பமும் உண்டு. பொய்யால் வாழ்ந்த குடும்பமும் உண்டு.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

தொல்காப்பியம் பொய்யும் வழுவும் தோன்றிய வரலாற்றைச் சுட்டுகின்றது.

**பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்**
**ஐயர் யாத்தனர் கரணம் என்ப.** (தொல். பொருள்.145)

வள்ளுவப் பெருந்தகை வாய்மை என்னும் அதிகாரத்தில் வாய்மைக்கு இலக்கணம் சொல்லிப் பொய்மையைப் பற்றியும் அழகாகப் பேசுகிறார். பிறருக்குக் குற்றமற்ற நன்மை தருமானால் பொய்யான சொற்களையும் வாய்மையாகவே கருதலாம் என்றும் கூறுகின்றார்.

**பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த**
**நன்மை பயக்கும் எனின்.** (குறள்.292)

இதில் எது பொய்மை, எது வாய்மை என்பதில் முரண் வரலாம். ஒருவன் பொய் சொன்னால் அந்தப் பொய்யை ஏன் சொல்கிறான் என்றும் அவன் சொல்கின்ற பொய்யால் "புரை தீர்ந்த" தன்மை உண்டா? இல்லையா? என்பதும் அவனுக்குத் தெரியும். அவன் கூறுகின்ற பொய்யால், புரை தீர்ந்த நன்மை உண்டாகும் எனக் கருதினால், அவன் மகிழ்ச்சியாக இருப்பான். அவனுடைய நெஞ்சம் அவனுக்கு வருத்தத்தைத் தராது.

**தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்**
**தன்நெஞ்சே தன்னைச் சுடும்.** (குறள்.293)

பல நேரங்களில் பிறருக்குத் தெரியாத சில உண்மைகள் தனக்கு மட்டும் தெரிந்த சில உண்மைகளாய் அமையக்கூடும்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

குறிப்பாகக் குடும்பங்களிலும், அலுவலங்களிலும், நட்பு வட்டாரத்திலும். அத்தகைய நேரங்களில் பிறருக்குத் தெரியாத எனக்கு மட்டுமே தெரிந்த உண்மையாயிற்றே என்று எண்ணாமல் உண்மையைச் சொல்லுக. பொய்யைச் சொல்லாதே, உண்மையை மறைக்காதே. மீறி உண்மையை மறைத்தாலோ பொய்யைக் கூறினாலோ, பொய் சொன்னாதற்காகத் தன்னுடைய மனமே தன்னை நெருப்பாய் சுட்டு எரித்து விடும். அதுவே மன நிம்மதியை அழித்து விடும். இன்னொரு குறள், ஒருவன் தன் உள்ளம் அறியப் பொய் இல்லாமல் நடப்பானானால் அத்தகையவன் அனைத்துத் தரப்பு மக்களின் உள்ளங்களிலும் இடம்பெற்று பேறு பெறுவான் என்று பேசுகின்றது.

**உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்**
**உள்ளத்து ளெல்லாம் உளன்.** (குறள்.294)

ஒருவன் பொய்யாமை பண்பை இடைவிடாது கடைப்பிடித்து வந்தால் அவன் வேறு அறங்களைச் செய்ய வேண்டியதில்லை. பிற அறங்களால் பெறக்கூடிய பயனைப் பொய்யாமையால் பெற முடியும்.

**பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற**
**செய்யாமை செய்யாமை நன்று**. (குறள்.297)

வள்ளுவர், வாய்மை அதிகாரத்தின் இறுதியில்,

**யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்**
**வாய்மையின் நல்ல பிற.** (குறள்.300)

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

என்ற குறளின் வாயிலாக, நாம் உண்மையாகக் கண்ட பொருள்களுள் வாய்மையைவிட எத்தன்மையாலும் சிறந்தவைகளாகச் சொல்லத் தக்கவை வேறு இல்லை என்று ஆணித்தனமாகச் சொல்லி முடிக்கின்றார். அக்காலத்திலேயே தமிழில் தீமைதரும் பொய்மை பற்றிப் பேசிய கருத்துகள் யாவும், வேறு எம்மொழி இலக்கியத்திலும் சொல்லப்படாத அரிய விளக்கத்தைத் தந்திருப்பது தனிச்சிறப்பாகும்.

**பிந்தைய சில குறிப்புகள்**

"நெஞ்சை ஒளித்தொரு வஞ்சகம் இல்லை" (கொன்றை வேந்தனில் ஔவையார்)

“பொய் சொல்லக் கூடாது பாப்பா”

“பயமெனும் பேய்தனை யடித்தோம் - பொய்மைப்
பாம்பைப் பிளந்துயிரைக் குடித்தோம்”

“பொய்மை கூறலஞ்சுலாய் வா வா வா”

“பொய்மை நூல்கள் எற்றுவாய் வா வா வா” (பாரதியார்)

“நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்" (உலகநீதியில் உலகநாதர்)

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

## முடிவுரை

எப்போதும் உறவுகளிடத்தும் பிறரிடத்தும் சொற்களைப் பயன்படுத்தும்போது மிகக் கவனமாக இருக்க வேண்டிய தேவையுள்ளது. மனிதன் ஐம்பொறிகளையும் அடக்கி ஆள வேண்டும் என்பர். ஒருவன் காக்க வேண்டியவற்றுள் எவற்றைக் காக்கா விட்டாலும் நாவையாவது காக்க வேண்டும். அதனைக் காக்கத் தவறினால் சொற்குற்றத்தில் அகப்பட்டு ஏசலுக்கும் பூசலுக்கும் ஆளாக நேரிடும்.

**யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்**
**சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.** (குறள்.127)

ஒருவனுடைய நெஞ்சகமே சொல்லுக்கும் செயலுக்கும் மூலக்காரணமாக அமைகின்றது. ஒருவனுடைய நெஞ்சகம் தூய்மையாக இருந்தால் அவனுடைய சொல்லும் செயலும் தூய்மையாகவே இருக்கும். அவனுடைய வஞ்சகமில்லாத செயல்களினால் எத்தீமையும் நிகழாது. நீரில் குளிப்பதால் உடல் தூய்மையைப் பேண முடியும். அதுபோல், எப்போதும் வாய்மையே பேசுவதால் மனத்தூய்மையைப் பேண முடியும்.

**புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை**
**வாய்மையால் காணப் படும்.** (குறள்.298)

இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களிலும் புறங்கூறுதல் இன்றியமையாத இடத்தைப் பெறுகிறது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

கைகேயியிடம் கூனி மூட்டிய புறங்கூறுதல் இராமாயணத்தில் முக்கியமான திருப்பங்களை ஏற்படுத்தியது. சகுனி கௌரவர்களிடம் புறங்கூறிப் பற்ற வைத்த தீவினையே மகாபாரதப் போருக்கு வழியை ஏற்படுத்திக் கொடுத்தது. ஆண்டாள் தனது திருப்பாவையில் பாவை நோன்புப் பற்றிக் குறிப்பிடுகையில் "தீக்குறளைச் சென்றோதோம்" என்கிறார். இங்கே 'தீக்குறளை' என்பது சில மனிதர்களிடம் காணப்படும் தீயச்செயலைக் குறிக்கிறது. ஆகவே மானிட வாழ்வில் நிகழும் சொற்குற்றங்களுக்கும் தீயச்செயல்களுக்கும் காரணம் மனதில் தூய்மையின்மையே எனலாம். ஒருவன் எந்தச் சூழலிலும் வாய்மையே பேசுவதால் மனதில் உள்ள மாசுக்கள் நீங்கும். சொற்குற்றமும் தீயச்செயல்களும் நிகழாது. ஆகவே நாம், இந்தப் பூவுலகில் சமூக நல்லிணக்கத்தோடு சொற்குற்றங்களை நீக்கிக் கூடி வாழ்ந்து கோடி நன்மைப் பெறுவோம் வாரீர்!.

## துணைநூல்கள்

1. ஆனந்தன், கு. ச., வள்ளுவரின் மெய்யியல், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம். 1986.
2. கிருட்டினமூர்த்தி, சா. (பதிப்பாசிரியர்), இக்கால உலகிற்குத் திருக்குறள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை. 2004, 3 தொகுதிகள்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

3. சாரங்கபாணி, இரா., திருக்குறள் உரைவேற்றுமை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர். 1989
4. சுப்பிரமணியன்.ச.வே.(ப.ஆ.), தமிழ்ச் செவ்வியல் நூல்கள் மூலம் முழுவதும், மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை சென்னை. 2008
5. தேவநேயப் பாவாணர், ஞா. திருக்குறள் - தமிழ் மரபுரை. ஶ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ், சென்னை